24th April 1959]

ரிப்பெயருக்கு ஒரு நாள் அனுப்பவேண்டும். இன்று வாங்கின பஸ்ஸாக இருந்தாலும் கூட அதை மன்த்லி ரிப்பெயருக்கு மாதந்தோறும் அனுப்ப வேண்டும், ப்ரேக் சர்டிபிக்கட்டுக்கு அனுப்ப வேண்டும், ஆன்வல் ரிப்பெயர்க்கும் அனுப்ப வேண்டும்.

Madras Legislative Assembly Session at Ootacamund

* 131 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to purchase any buildings at Ootacamund other than Arranmore Palace for holding Assembly Sessions; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) There is no such proposal at present.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI : வேறு கட்டிடம் வாங்காவிட்டாலும், தமிழகத்தையாவது விஸ்தரித்து ஒவ்வொரு வருஷமும் சட்ட சபையை இங்கு நடத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : பொறுத்திருந்து பார்த்துத் தான் பின்னால் சொல்ல முடியும்.

SRI J. MATHA GOWDER : நீலகிரியில் இருக்கக்கூடிய மக்கள் எல்லோரும் சட்ட சபையை குறைந்தது இரண்டு மாதங்களுக்காவது இங்கு நடத்த வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகையால் இந்தக் கட்டிடத்தை விஸ்தரித்து நிரந்தரமாக இங்கு சட்டசபை நடப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இதுபற்றி ஆலோசனை செய்துதான் பிற்பாடு முடிவு செய்யப்படும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த விஷயத்தில் சர்க்கார் தனியாக எந்த விதமான முடிவும் எடுப்பதாக இல்லை. அங்கத்தினர்கள் எந்த விதத்தில் கருதுகிறார்களோ அந்த விதத்தில் முடிவு எடுப்பதாக இருக்கிறது.

Deep bore-wells for Udayarpalayam taluk

* 132 *Q.*—SRI S. RAMALINGA PADAYACHI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலுகாவில் எத்தனை ஆழத் துளை கிணறுகள் போடப்பட்டன ?

(ஆ) அதில் எத்தனை கிணறுகளில் தானாகத் தண்ணீர் வெளி வருகின்றது ?

(இ) பாக்கியிருக்கும் கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா ?

(ஈ) அப்படியிருந்தால் அதன்மேல் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ?